### அடிப்படை அறிவு கூட இல்லாமல்

# துப்பாக்கிக் கலாச்சாரம் பற்றி எடப்பாடி பழனிசாமி பேசலாமா?

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கண்டன அறிக்கை!



சென்னை, ஜூன் 17 - போலீஸ் விசாரணை பற்றி அடிப்படை அறிவு கூட இல்லாத பழனிசாமி காவல் துறைக்குப் பொறுப்பு வகித்திருக்கிறார் எனவும் துப்பாக்கி கலாச்சாரம்தான் பழனிசாமி ஆட்சியில் நிலவிய அமைதி, வளம், வளர்ச்சியா? என்றும் அ.தி.மு.க. ஆட்சியில் துப்பாக்கி கலாச்சாரம் பற்றி உயர் நீதிமன்றமே கண்டித்தது நினைவில்லையா? என்றும் கேள்விகள் எழுப்பி போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது கண்டன அறிக்கை வருமாறு:-

பா.ம.க. இளைஞரணி மாவட்டச் செயலாளர் சக்கரவர்த்தி துப்பாக்கியில் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருப்பது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி. தமிழ்நாட்டின் பாதுகாப்பைச் சீர்குலைத்துச் சீரழிவு ஆட்சி நடத்திய பழனிசாமி, திமுக அரசைக் குறை சொல்வதற்கு அருகதை கிடையாது!

சக்கரவர்த்தி வழக்கில் சம்பவம் நடந்த 3ஆவது நாளே முக்கியக் குற்றவாளிகள் இருவரை போலீஸ் கைது செய்துள்ளது. சக்கரவர்த்தி 11.06.2025ம் தேதி இரவு பைக்கில் வீட்டிற்குச் சென்றவர் சாலையில் உயிரிழந்து கிடந்தார். சடலத்தை உடற்கூறு ஆய்வுக்கு அனுப்பிவிட்டு, சந்தேகம் மரணமாக முதலில் வழக்குப்பதிவு செய்து விசாரணையைத் தொடங்கியது போலீஸ். உடற்கூறு ஆய்வில், சக்கரவர்த்தி நாட்டுத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டது தெரியவந்ததும், கொலை வழக்காக மாற்றப்பட்டு உடனே இருவரை போலீஸ் கைதும் செய்தது.

ஒருவரின் மரணத்திற்குத் தெளிவான காரணம் தெரியாவிட்டால் இபிகோ சட்டத்தின் (IPC) பிரிவு 174ன் கீழ் முதலில் காவல்துறை வழக்குப் பதிவு செய்யும். பிறகு மரணத்தில் சந்தேகம் எழுந்தால் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (CrPC) பிரிவு 176ன் கீழ் வழக்கை மாற்றுவார்கள். கொலை என்பது உறுதியானால், கொலை வழக்காக மாற்றலாம். இந்த அடிப்படையில்தான் சக்கரவர்த்தி வழக்கு முதலில் மர்ம மரணம் எனப் பதிவு செய்யப்பட்டது.

**அடிப்படை அறிவும் இல்லை!**

போலீஸ் ஸ்டேஷன் பக்கம் ஒதுங்காத, செய்தித்தாள் படிக்கிற பாமரனுக்கு கூட தெரிந்த இந்த உண்மை, உள் துறையை கையில் வைத்திருந்த முன்னாள் முதல்வர் பழனிசாமிக்கு தெரியவில்லை என்றால் அவர் முதலமைச்சர் நாற்காலியில் அமரவே தகுதியில்லாதவர். காவல் துறைக்குப் பொறுப்பு அமைச்சராக 4 ஆண்டுகள் இருந்த பழனிசாமிக்கு இந்த அடிப்படை அறிவு கொஞ்சம்கூட இல்லை.

பா.ஜ.க. பிரமுகர் சீனிவாசன் கொலை வழக்கில் கைதான நபர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட காரணத்தினாலேயே பா.ம.க. பிரமுகர் சக்கரவர்த்தி கொலை நடந்துள்ளது. பாஜகவுடன் கூட்டணி சேர்ந்து, பாமகவைக் கூட்டணியில் சேர்க்கும் முயற்சியில் இறங்கியிருக்கும் பழனிசாமி, பாமகவுக்கு தூது விடுவது போல அறிக்கை விட்டிருக்கிறார். பா.ம.க. நிர்வாகியைக் கொலை செய்தவர் பா.ஜ.க. நிர்வாகியின் மகன் என்று பழனிசாமி ஏன் சொல்லவில்லை?

அரசியல் செய்ய எதுவும் கிடைக்காமல், ஏதேனும் குற்றச் சம்பவங்கள் நடக்காதா? அதை வைத்து ஏதேனும் மலின அரசியல் செய்ய முடியாதா? எனக் குற்றங்களைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறார் பழனிசாமி.

திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருப்பதை ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களே சொல்லும். தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) வெளியிட்ட தரவுகளின் படி 2020 ஆண்டு பழனிசாமியின் ஆட்சியில் IPC ல் பதியப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 8,91,700, திமுக அரசின் தீவிரமான நடவடிக்கையால் 2022 ஆண்டு IPC ல் பதியப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 1,93,913 குறைந்தது. கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் குற்றங்களைக் குறைத்தது திராவிட மாடல் அரசுதான். இந்த இலட்சணத்தில் கேடுகெட்ட ஆட்சி நடத்திய பழனிசாமி அ.தி.மு.க. ஆட்சியில் அமைதியும் வளமும் வளர்ச்சியும் பெற்றதாகக் கூசாமல் அடித்து விட்டுக் கொண்டிருக்கிறார்.

**துப்பாக்கி கலாச்சாரம் பழனிசாமி பேசலாமா?**

துப்பாக்கி கலாச்சாரம் பற்றியெல்லாம் பழனிசாமி பேசலாமா? அ.தி.மு.க. ஆட்சியில் துப்பாக்கி மலிவு விலைக்கு விற்கப்பட்டதும், அதை வாங்கி கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டதையும் மக்கள் மறக்க மாட்டார்கள். தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகுதான் துப்பாக்கி கலாச்சாரம் வந்தது போல பழனிசாமி பேசுவதைப் பார்த்து மக்கள் சிரிப்பார்கள்.

★ 2018ல் கள்ளத் துப்பாக்கி கடத்தல் வழக்கில் சென்னையைச் சேர்ந்த பரமேஸ்வரன் எனும் காவலரே கைதானார்,

★ 2020ல் 8 துப்பாக்கிகள், 60 தோட்டாக்களுடன் கும்பகோணம் அருகே மருத்துவர் ராம்குமார் பிடிபட்டார்.

★ 2018 ஏப்ரலில் அடையாறு இந்திரா நகர் வங்கியில் துப்பாக்கி முனையில் 7 லட்சம் கொள்ளை.

★ 2018ல் கன்னியாகுமரியில் 10 ஆயிரம் ரூபாய்க்கு நாட்டுத் துப்பாக்கி விற்பனை.

★ 2020 மே மாதம் திருப்பூரில் நிலம் தொடர்பான பிரச்சினையில் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி பணம் கேட்ட நபர்,

★ 2020 ஜூலையில் ஈரோட்டிலிருந்து 9 எம்.எம். ரகக் கள்ளத்துப்பாக்கி, 5 தோட்டாக்களுடன் திருநெல்வேலிக்கு வந்த குமுளி ராஜ்குமார்.

★ 2020 செப்டம்பரில் சென்னை பெரம்பூரில் வீடு புகுந்து துப்பாக்கியைக் காட்டி பெண்ணை மிரட்டிய நபர்,

★ 2020 நவம்பரில் திருக்கோவிலூர் அருகே மளிகை கடைகாரர் நாட்டுத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை.

இப்படிப் பழனிசாமி ஆட்சியில் நடந்த துப்பாக்கி சம்பவங்களைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். "துப்பாக்கி கலாச்சாரத்தை ஒடுக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?" என்று கேள்வி கேட்க எடப்பாடி பழனிசாமிக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

**உயர்நீதிமன்றம் கண்டித்துள்ளது!**

2020 ஆகஸ்ட் மாதம் வழக்கு ஒன்றை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கிருபாகரன், "பீகார், ஜார்கண்ட், சத்தீஸ்கரில் இருந்து நாட்டு துப்பாக்கிகள் தமிழகத்தில் ரவுடிகள், குண்டர்கள், அரசியல்வாதிகளுக்கு சப்ளை செய்யப்படுகிறது. அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து துப்பாக்கி கலாச்சாரத்தை தடுக்க வேண்டும்" என்று கூறியது பழனிசாமிக்கு தெரியாதா? இதுதான் அவருடை ஆட்சியில் நிலவிய அமைதி, வளம், வளர்ச்சியா?

சக்கரவர்த்தி கொலை வழக்கில், "கள்ளத் துப்பாக்கி எப்படி கிடைத்தது என்பதை விசாரிக்க வேண்டும்" என்று சொல்லும் எடப்பாடி பழனிசாமி, அதிமுக ஐடி விங் பிரமுகர் பிரபாத்துக்கு டபுள் பேரல் துப்பாக்கியை யார் வாங்கி கொடுத்தது? என பழனிசாமி விளக்குவாரா?

திமுக அரசு அமைந்த பிறகுதான் குற்றங்கள் தடுக்கப்பட்டு, குறைந்து கொண்டு வருகின்றன. சட்டம் ஒழுங்கைச் சிறப்பாகப் பாதுகாத்து வருவதால்தான் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.69 விழுக்காடாக உயர்ந்து நாட்டிலேயே முதலிடத்தில் இருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி தாலுகா ஜெயன் கொண்ட நிலையைச் சேர்ந்த அ.தி.மு.க. மூத்த முன்னோடி சேவக மூர்த்தி அக்கட்சியில் இருந்துவிலகி மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தேவகோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் நாகணி ரவி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் ஆர்.கார்த்திகேயன், அசோக் ஆகியோர் உள்ளார்கள்.

### கலைஞர் கருவூல துணை அமைப்பாளர்

# தஞ்சை இரா.ரத்தினகிரி மருத்துவமனையில் அனுமதி!

## குடும்பத்தினரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நலம் விசாரித்தார்!

தஞ்சை, ஜூன் 17 -

கலைஞர் கருவூல துணை அமைப்பாளர் தஞ்சை இரா.ரத்தினகிரி உடல் நலம் குன்றி தஞ்சை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிரச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில் தஞ்சையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இரத்தினகிரி சிகிச்சைப் பெற்று வரும் மருத்துவமனைக்குச் சென்று அங்கு அவரின் குடும்பத்தாரிடம் நலம் விசாரித்தார். மேலும் மருத்துவர்களிடம் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.

### தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் –

# 'கீழடி - தொடரும் வஞ்சக அரசியல்' கருத்தரங்கம்!

## கோவை. கு.இராமகிருட்டிணன் – சு.வெங்கடேசன் எம்.பி. – பேராசிரியர் கருணானந்தன் சிறப்புரை!

சென்னை, ஜூன் 17 –

தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 'கீழடி – தொடரும் வஞ்சக அரசியல்' எனும் கருத்தரங்கம் சென்னை அன்பகத்தில் நேற்று முன்தினம் (15.6.2025 – ஞாயிறு மாலை 5 மணியளவில்) நடைபெற்றது.

'கீழடி – தொடரும் வஞ்சக அரசியல்' எனும் இக்கருத்தரங்கத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை. கு. இராமகிருட்டிணன் தலைமையுரையும், ஜனா விஜய் வரவேற்புரையும் நிகழ்த்த, மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், பேராசிரியர் கருணானந்தன், வழக்கறிஞர் வை.இளங்கோவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மேலும் இதில் து.இரவிச்சந்திரன், ம.ரே.இராஜ்குமார், வழக்கறிஞர் சரவணன், ஆவடி நாகராசு, மா.கண்ணதாசன், து.வெங்கடேசன், சித்ரா, கிரேசி, வெங்கடேஷ் முன்னிலை வகித்தனர்.

கு.சுரேஷ்குமார் நன்றியுரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியை, சென்னை மாவட்ட தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஏற்பாடு செய்திருந்தது.

### செஞ்சி பேரூராட்சி சக்கராபுரத்தில்

# ரூ. 2 கோடி மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் கட்டும் பணி!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்! மொக்தியார் அலி மஸ்தான் தலைமை!

செஞ்சி, ஜூன் 17 - செஞ்சி பேரூராட்சி சக்கராபுரத்தில் ரூ 2கோடி மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் கட்டுவதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார்.

செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சி 18 வது வார்டு சக்காராபுரம் குளக்கரை பகுதியில் புதிய உயர் மட்ட மேம்பாலம் கட்ட வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்து நபார்டு நிதி உதவி திட்டத்தின் கீழ் சக்கராபுரம் இறக்கத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பாக்ஸ் கல்வெட்டு மேம்பாலம் கட்டுவதற்கு விழா நடைபெற்றது.

செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் தலைமை தாங்கினார்.

செஞ்சி ஒன்றியப் பெருந் தலைவர் விஜயகுமார் முன்னிலை வகித்தார்.

18 வது வார்டுக் கவுன்சிலர் மோகன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்டக் கவுன்சிலர் அரங்க ஏழுமலை, மாவட்ட விவசாய அணித் தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன், நகரச் செயலாளர் கார்த்திக், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் சங்கர், அஞ்சலை நெடுஞ்செழியன், சிவக்குமார், வார்டுச் செயலாளர் ஜி.டி.தனசேகரன், தொண்டரணி பாஷா, நிர்வாகிகள் சேகர், ராம்குமார், ஜாபர் ஷரீப், மொபின், வீரக்குமார் தேசிங்கு ராஜன், ராஜராஜன், மகளிர் அணி சரஸ்வதி, நிர்மலா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சாம்பியன்ஷிப் ஹாக்கி போட்டியில் 3, 4 ஆவது இடத்தைப் பெற்ற

# நெல்லை மாவட்ட ஹாக்கி அணியினருக்கு பாராட்டு!

## மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் வாழ்த்தினார்!

நெல்லை, ஜூன் 17 - நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சப் ஜூனியர் ஆண்களுக்கான சாம்பியன்ஷிப் ஹாக்கி போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற சப் ஜூனியர் ஹாக்கி அணியினரும், சீனியர் ஆண்களுக்கான சாம்பியன்ஷிப் ஹாக்கி போட்டியில் நான்காவது இடத்தை பெற்ற சீனியர் ஹாக்கி அணியினரும் 13.06.2005 அன்று மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமாரை சந்தித்து வெற்றி பெற்ற கோப்பை மற்றும் சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டுத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். இதனால் விளையாட்டு வீரர்கள் அதிக அளவில் போட்டிகளில் கலந்து கொண்டு தமிழ்நாட்டுக்கு சிறப்பு செய்து வருகின்றனர்.

தற்போது பெண்களும் விளையாட்டுப் போட்டியில் அதிக அளவில் ஈடுபட வேண்டும் என்றும் துணை முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, சமீபத்தில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழு நிகழ்வில் மாநில அளவில் பன்முகக் கலாச்சாரப் போட்டியில் வெற்றி பெற்ற சுயஉதவிக் குழுக்களுக்கு, விருதுகள், சான்றிதழ்கள் மற்றும் பரிசுத்தொகை வழங்கி, அவர்களை வெகுவாக பாராட்டினார்கள்.

இந்நிலையில் ஆண்களுக்கான சப் ஜூனியர் மாநில சேம்பியன்சிப் ஹாக்கி போட்டிகள் வேலூர் மாவட்டத்தில் 19.05.2025 முதல் 23.05.2025 வரை நடைபெற்றது.

இப்போட்டியில் நெல்லை மாவட்ட ஹாக்கி அணி மூன்றாவது இடத்திற்கான வெற்றிக்கோப்பையை வென்றது.

அதே போன்று சீனியர் ஆண்களுக்கான மாநில சாம்பியன்ஷிப் ஹாக்கி போட்டிகள் 04.06.2025 முதல் 08.06.2025 வரை கோவில்பட்டியில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்ட நெல்லை மாவட்ட ஹாக்கி அணி நான்காமிடத்திற்கான கோப்பையை வென்றது. மேலும் போட்டியில் சிறப்பாக விளையாடிய பாளை எம்.என்.ஏ. அப்துல் ரகுமான் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் பாளையங்கோட்டை விளையாட்டு விடுதியைச் சார்ந்த பால சுந்தர், அபினேஷ், நித்திஷ் மற்றும் கௌதம் ஆகிய நான்கு பேர்கள் தேசிய போட்டிக்கு தேர்வாகியுள்ளார்கள்.

இந்த வீரர்கள் அனைவரையும் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் பாராட்டி அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஹாக்கி யூனிட்க ஆப் திருநெல்வேலி நிர்வாகிகள் முனைவர் க.சேவியர் ஜோதி சற்குணம், கோயில் தாஸ், ஜான்சன், சார்லஸ், உடற்கல்வி இயக்குனர் அப்துல் கரீம் மற்றும் முன்னாள் அஞ்சலக அலுவலர் சுடலைமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டுத் துறைக்கு கொடுக்கும் முக்கியத்துவத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் - செம்மொழி நாள் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.அறிக்கை!

திருவாரூர், ஜூன்17 - திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான செம்மொழி நாள் சிறப்பு பொதுக்கூட்டம் நாளை (18.06.2025 - புதன்) மாலை 6.00 நடைபெறுகிறது. இதுகுறித்து மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமது 14வயதில் தமிழ் மொழி காக்க திருவாரூர் வீதிகளில் புலிக்கொடி ஏந்தி புறப்பட்ட அந்த மொழிப்போரின் விளைவாக தமிழ் இன்று சர்வதேச தரத்துடன் மூத்த முதல் மொழியாய் பாரெங்கும் பட்டொளி வீசி பறக்கிறது. தமது வாழ்நாள் முழுவதும் தமிழ் மொழியும் இனமும் தழைக்க வேண்டும் என போராடிய அந்த மகத்தான தலைவரின் தமிழ் தொண்டினை போற்றும் விதமாக தமிழ்நாடு முதல்வர் ,திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை ஜூன் 3 செம்மொழி நாளாக அறிவித்து பெருமை சேர்த்து இருக்கிறார்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை இந்த உலகிற்கு தந்து பெருமை பெற்ற திருவாரூர் மாவட்டக் கழகம் சார்பில் கலைஞர் பிறந்த நாளான செம்மொழி நாள் சிறப்பு பொதுக்கூட்டம் நாளை (18.06.2025 - புதன்) மாலை 6.00 மணிக்கு திருவாரூர் கீழவீதில் நடைபெற இருக்கிறது . இந்த கூட்டத்தில் திராவிட இயக்கத்தின் போர்முரசம் நாவுக்கரசர் நாஞ்சில் சம்பத், முன்னாள் தாட்கோ தலைவர், மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் உ. மதிவாணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாகை. அ.அசோகன் உள்ளிட்டோரும் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

திருவாரூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் எஸ்.கே.வேதரத்தினம் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர பேரூர் நிர்வாகிகள், பொதுக்குழு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முன்னிலை ஏற்கவிருக்கும் இந்த கூட்டத்திற்கு நகரச் செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் வரவேற் புரையும், ஒன்றியச் செயலாளர் புலிவலம் ஏ.தேவா நன்றியும் கூறவிருக்கின்றனர்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளும், சார்பு அணிகளின் நிர்வாகிகளும், வார்டு கிளைக்கழக நிர்வாகிகள் பெரும் திரளாக பங்கேற்றுச்சிறப்பிக்க வேண்டுகிறேன். இவ்வாறு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



விழுப்புரம் மாவட்டம், செஞ்சி பேரூராட்சி 18வது வார்டு சக்கராபுரத்தில் ரூ. 2 கோடி மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் கட்டுவதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மாவட்டக் கவுன்சிலர் அரங்க ஏழுமலை, மாவட்ட விவசாய அணித் தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன், நகரச் செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



கடலூர் மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி தாழம்பட்டு ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 13.50 லட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக் கடை கட்டிடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பண்ருட்டி முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் சபா.பாலமுருகன், ஊராட்சிச் செயலாளர் பரமதேவன், மாவட்டப் பிரதிநிதி லட்சுமி நாராயணன், லோகநாதன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.ரகுபதி, கிளைக் கழக நிர்வாகிகள் சக்திவேல், பஞ்சாட்சரம், ஆர்.பாலசுப்பிரமணியம், லோகநாதன், பத்மநாபன், அண்ணாதுரை, சிவபாலன், குமாரசாமி, கருணாமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.